## 1.1 அபிப்பிராயம்

ஸ்ரீலங்கா கேட்டரிங் லிமிட்டட்டின் (“கம்பனி”) 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுக் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனியின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

-----------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக தொகுதியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- கம்பனி ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி செயற்படுகின்றதா எனவும்,

- கம்பனி தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனம் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

## 1.6 பெறவேண்டிய மற்றும் கொடுக்கவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பெறவேண்டிய வியாபார கணக்குகள் மீதியானது வியாபார கடன்பட்டோர்களின் எதிர்மறை மீதியை எதிரீடு செய்தமையால் ரூபா 6,198,338 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | இது கடந்த காலத்தில் நடைமுறையில் இருந்தது. எனினும், நாங்கள் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவோம் | நிதிக்கூற்றுக்களில் செலவு மீதிகளை தனியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபார வருமதிகள் ரூபா 11,347 மில்லியன் ஆகும். அதில், 94 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 10,686 மில்லியன் தொகையொன்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து பெறவேண்டியிருந்தது. மேலும், மேற்குறித்த மீதியில் ரூபா 4,980 மில்லியன் தொகை தீர்க்கப்படாது ஒரு ஆண்டிற்கு மேலாகவிருந்தது. 2020 மார்ச் 31 இல் உள்ளவாறு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து பெறவேண்டியிருந்த மீதி கம்பனியின் மொத்தச் சொத்துக்களின் 67 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. எனினும், கம்பனியானது கம்பனியானது மேற்குறிப்பிடப்பட்ட நிலுவை மீதிக்குப் பதிலாக காணப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிற்கு போதிலும், ரூபா 1,701 மில்லியன் தொகை பங்கிலாபத்தினை செலுத்தியிருந்தது. | கம்பனியின் முகாமைத்துவமானது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து அத்தகைய மீதிகளை அறவிடும் செய்முறையிலுள்ளது. | எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து அத்தகைய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | பொதுமுயற்சிகள் நல்லாளுகையின் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | (i) 7.4.5 ஆம் பந்தி | 2020 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் நிலையான சொத்துக்களின் சரிபார்த்தலினை மேற்கொள்வதற்கு வருடாந்த பொருள் அளவைச் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியானது இறந்தகாலத்தில் இதனுடன் இணங்கியிருந்தது. எனினும், கொவிட் 19 இனால், சில பிரதேசங்கள் பூட்டப்பட்டதுடன் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், பொருள் அளவைச் சபையின் உறுப்பினர்கள் மற்றும் வீடிஓவின் கணக்காய்வாரள்களால் உறுதிப்படுத்தலிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க முடிந்திருக்கவில்லை. இருந்தபோதிலும், கம்பனியானது சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களின் ஆகக்குறைந்தளவு பங்குபற்றலுடன் இறுதி ஆண்டு இருப்பு கணக்கெடுப்பினை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் செய்தது. | கம்பனியின் நிலையான சொத்துக்களின் சரிபார்த்தலினை மேற்கொள்வதற்கு வருடாந்த பொருள் அளவைச் சபை குறித்த காலத்தில் நியமிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 9.3.1(i) ஆம் பந்தி | கம்பனியின் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் திட்டம் (எஸ்ஓஆர்) பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வரிசை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகளிற்காக கம்பனியானது அதன் மனிதவளங்கள் (எச்ஆர்) கோவையை பின்பற்றியிருந்ததுடன் தொடர்ந்துவரும் மாற்றங்கள் சபையால் 2016 ஆகஸ்ட் 16 மற்றும் 2019 ஒக்தோபர் 10 இல் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில், எச்ஆர் கோவையானது பொதுத்திறைசேரியுடனும் பகிரப்படும். | கம்பனியின் எஸ்ஓஆர் பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வரிசை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.9 தகவல் தொழில்நுட்ப பொதுக்கட்டுப்பாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இடர் மீளறவீடுத் தளமானது (டீஆர்) கம்பனியால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. டீஆர் தளம் இல்லாமையானது தரவினை இல்லாமல் செய்கின்ற இடரினை அல்லது கீழேதள்ளக்கூடிய நிலைமையினை ஏற்படுத்தும். இது நிறுவனத்தை நலிவடையச்செய்யக்கூடும். | எஸ்எல்சீ இற்கான டீஆர் தளமொன்றை வைத்திருக்காமையால் ஏற்படுகின்ற இடரானது ஜஎஸ்ஓ 27001 மற்றும் ஜஎஸ்ஓ 20000 ஊடாக சான்றுறுதிப்படுத்தப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட குழு தரவு பாதுகாப்பு வரையறையினூடாக அதிகூடியளவிற்கு குறைக்கப்பட்டது. முறைமை வக்கப்(Backup) மற்றும் நெற்வேக் மிகைகள் வீசீஎம் தேவைப்பாடுகளினூடாக நிறுவப்பட்டது. எஸ்எல்ஏ தரவு மைத்திய நிலையத்திலுள்ள கொஸ்ரட் செய்யப்பட்ட அமைப்பு யூஎல் வீசீபி மற்றும் டீஆர் விருப்பதேர்வுகளினூடாக மேவுகை செய்யப்பட்டது. | ஏதாவது விபத்தில்லாமல் அல்லது இடரில்லாமல் செயற்பாடுகளை தொடர்வதனை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனத்திற்கான இடர் மீளறவீடுத் தளத்தினை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மைக்ரோசொப்ற் கூட்டுத்தாபனமானது பாதுகாப்பு பற்ச்ஸ்சையின் உதவியினை இடர்நிறுத்தியும் கூட வின்டோஸ் செயற்பாட்டு முறைமைக்கான வின்டோஸ் நாளதுவரையாக்கல் மற்றும் தொழில்நுட்ப உதவி இடைநிறுத்தப்பட்டது. | கம்பனியின் அனைத்து பீசீக்களில் 64 பீசீக்கள் மாத்திரம் வின்டோஸ் 10 உடன் ஒப்பிடமுடியாதிருந்தது. கம்பனீன் செயற்பாடுகள் கொவிட்-19 இயல்புநிமைமைக்கு வந்தவுடன் பாதுகாப்பு பிரச்சனைகளை தீர்ப்பதற்கு தீர்வொன்று வழங்கப்படும். | கம்பனியானது அதனுடைய தகவல்களின் பாதுகாப்பிற்காக தொழில்நுட்பத்தினை நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

கம்பனியானது பீசியினூடாக நிறுவப்பட்ட வின்டோஸ் 7 இனை பயன்படுத்திவருகின்றது. அதன்மூலம் பீசியானது மால்வெயார் மற்றும் சைவர் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும்.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் தொழிற்பாடுகளானது முன்னைய ஆண்டிற்கான ரூபா 5,602 மில்லியன் இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 4,759 மில்லியன் தேறிய இலாபமொன்றை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 843 மில்லியன் பின்னடைவொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 616 மில்லியன் இனால் விமான சமையலறை வருமானம் குறைவடைந்தமை இந்த பின்னடைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(ஆ) 2015/16 ஆம் ஆண்டு தொடக்கம் 2018/19 ஆம் ஆண்டுவரையான கம்பனியின் பெறுமதிச் சேர்க்கை விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **2019/20** | **2018/19** | **2017/18** | **2016/17** | **2015/16** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| வரிக்கு பின்னரான இலாபம் (பங்கிலாப கொடுப்பனவின் முன்னர்) | 4,759.51 | 5,602.50 | 3,890.30 | 3,736.39 | 3,637.86 |
| **சேர்ப்பனவு:-** | | | | | |
| ஊழியர் சம்பளம் | 1,202.97 | 1,128.26 | 1,019.78 | 890.15 | 788.02 |
| அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் (நேரில்) | | | | | |
| முன்னுரிமைப் பங்குகள் | 130.10 | 130.10 | 130.10 | 130.10 | 196.78 |
| சாதாரண பங்குகள் | 1,701.25 | 3280.18 | 5,314.10 | 3,093.48 | 2,100.00 |
| அரசாங்கதிற்கு செலுத்தப்பட்ட வரி | | | | | |
| என்பீரீ | 0.41 | 0.55 | 0.16 | 0.58 | 0.47 |
| வற் | 7.64 | 13.55 | 11.42 | 13.13 | 4.03 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏனைய தீர்வைகள் - ஈஎஸ்சீ | 33.95 | 48.79 | 41.99 | 34.73 | 15.01 |
| பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு | 377.72 | 218.33 | 196.55 | 284.67 | 305.53 |
| | ------------ | ------------ | ----------- | ----------- | ------------ |
| **மொத்தம்** | 8,213.55 | 10,422.26 | 10,604.40 | 8,183.23 | 7,047.70 |
| | ======= | ======= | ======= | ====== | ======= |

கம்பனியின் பெறுமதிச்சேர்க்கையானது சாதாரண பங்குகளின் பங்குலாபம் கொவிட் - 19 நிலைமையால் குறைந்தமையால் முன்னைய ஆண்டிலிருந்து படிப்படியாக குறைவடைந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நடைமுறை மற்றும் முன்னைய ஆண்டிற்காள கம்பனியின் முக்கிய விகிதங்கள் பின்வருமாறுள்ளது.

| | 2019/20 | 2018/19 | 2017/18 | 2016/17 | 2015/16 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்களிற்கான நடைமுறைச் சொத்துக்கள் (தடவைகளின் எண்ணிக்கை) | 6.16 | 7.82 | 6.44 | 8.76 | 9.74 |
| விரைவு விகிதம் | 6.01 | 7.55 | 6.14 | 8.46 | 9.43 |
| கடன் உரிமை மூலதன விகிதம் | 0.14 | 0.21 | 0.26 | 0.19 | 0.21 |
| ஈபிஎஸ் - பங்கொன்றிற்கான உழைப்பு | 5.06 | 5.96 | 4.14 | 3.97 | 3.87 |
| பங்கொன்றிற்கான பங்குலாபம் | - | 4.47 | 3.10 | 3.38 | 3.29 |
| மொத்த எல்லை | 81% | 79% | 77% | 77% | 77% |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 39% | 59% | 58% | 46% | 49% |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீட்கக்கூடிய முன்னுரிமைப்பங்கிற்கானது **நடைமுறையல்லாப்பொறுப்பிலிருந்து நடைமுறைப்பொறுப்பிற்கு** வகைப்படுத்தப்பட்டமையால நடைமுறைப் பொறுப்புகளிற்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவு விகிதங்கள் என்பன பிரதானமாக மீளாய்வாண்டில் குறைவடைந்திருந்தன.

(ஆ) வரிக்குப் பின்னரான இலாபம் குறைந்தமை காரணமாக மீளாய்வாண்டில் பங்கொங்கிற்கான உழைப்பு முறையே ரூபா 0.90 ஆல் குறைவடைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

விமான சமயலறைகளை பராமரித்தல் மற்றும் செயற்படுத்துதல், விமானப் பிரயாணிகளால் வேண்டப்பட்டவாறு உணவுகள், பானங்கள் மற்றும் அத்தகைய ஏனைய உணவுப்பொருட்களை வழங்குதல் தொடர்பான வணிகத்தை மேற்கொள்ளுதல், விமானங்களிற்காக பிரயாணிகள் காத்திருக்கும் இடங்களை (செயற்படுத்துதல், பண்டகசாலைகள், இணைந்த களஞ்சியங்கள் போன்றவற்றை பெற்று வழங்குதல் மற்றும் சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவகங்கள் போன்றவற்றின் உரிமையாளர்களாக வணிகத்தை மேற்கொள்ளுதல் என்பன கம்பனியின் நோக்கங்களாக உள்ளன. கம்பனியின் ஒவ்வொரு உற்பத்திப் பிரிவினதும் விற்பனை வருமானம் மற்றும் இலாபம் / (நட்டம்) கடந்த மூன்று வருடங்களில் பின்வருமாறு உள்ளன.

| வருமான மூலம் | 2019/20 | | 2018/19 | | 2017/18 | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருமானம் | ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்) | மொத்த வருமானம் | ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்) | மொத்த வருமானம் | ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன | ரூபா. மில்லியன் |
| விமான சமையலறை | 7,209.31 | 4,101.20 | 7,825.30 | 4,799.99 | 6,754.96 | 3,140.60 |
| பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம | 1,219.99 | 435.29 | 1,266.32 | 545.76 | 1,210.34 | 544.01 |
| வனிலா பொட் | 34.00 | 7.16 | 31.88 | 6.96 | 25.17 | 5.86 |
| செமொண்டு உணவகம் | 25.48 | 11.11 | 38.60 | (6.05) | 90.81 | (5.72) |
| ட்ரான்சிற் ஹோட்டல் | 173.76 | 49.17 | 174.58 | 67.80 | 149.45 | 50.42 |
| எமிரேட்ஸ் லோன்ஞ் | 128.33 | 65.21 | 140.23 | 73.56 | 133.53 | 67.39 |
| மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய (எம்ஆர்ஐஏ) உணவகம் | 7.5 | (1.96) | 12.8 | (15.47) | 9.45 | (21.32) |
| லோன்றி | 227.75 | 92.33 | 259.95 | 129.96 | 223.81 | 109.06 |
| மொத்தம் | 9,026.12 | 4,759.51 | 9,749.66 | 5,602.51 | 8,597.52 | 3,890.30 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செமண்டு உணவகத்திலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டிலிருந்த ரூபா 38.60 மில்லியனிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 25.48 மில்லியனிற்கு குறைவடைந்திருந்த அதேநேரம், உணவகத்திலிருந்தான இலாபம் ரூபா 17.16 மில்லியனால் அதிகரித்தது.

(ii) மத்தல ராஜபக்ச சர்வதேச விமான நிலைய (எம்ஆர்ஐஏ) உணவகம் ஆரம்பத்திலிருந்து நட்டமடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது அது தொடர்பாக ரூபா 15.47 மில்லியன் மற்றும் ரூபா 1.96 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | சியாரிசு |
|---|---|---|---|
| (அ) | 08 ஆம் இலக்க என்பீஏ சுற்றறிக்கையின் கீழுள்ள தேசிய பெறுகை முகவராண்மையால் 2006 சனவரியில் வழங்கப்பட்ட பெறுகை வழிகாட்டியின் 4.2.1(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம், ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகைத்திட்டத்தில் பட்டியல்படுத்தப்படுவதுடன் இது மேற்குறிப்பிடப்பட்ட வழிகாட்டியின் 4.2.1 (உ) ஆம் பந்தியின் பிரகாரம் ஆறு மாதத்தை தாண்டாத இடைவெளியில் ஒழுங்குமுறையில் நாளதுவரையாக்கப்பட வேண்டும். எனினும், அத்தகைய பெறுகைத்திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஸ்ரீலங்கா கேட்டரிங் லிமிட்டட்டானது முலதனச் செலவினத்தையும் உள்ளடக்குகின்ற மூன்றாண்டு தந்திரோபாயத்திட்டத்தை கொண்டுள்ளது. எனினும், வியாபாரத்தின் தன்மையால் மூலப்பொருட்களிற்கான பெறுகைத்திட்டம் வருடாந்தம் தயாரிக்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்தப் பெறுகைத்திட்டம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | பிரதான பெறுகைத்திட்டமானது தயாரிக்கப்பட்டு ஒழுங்குமுறையில் ஆறு மாதங்களை மீளாமல் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மேற்கூறப்பட்ட பெறுகை வழிகாட்டியின் 4.2.2 (ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகை நேரப் பட்டியல் (பீரீஎஸ்) இரண்டு கட்டங்களில் தயாரிக்கப்பட்டு உரிய பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்படும். எனினும், கம்பனியானது மீளாய்வாண்டின்போது அனைத்து பெறுகை நடவடிக்கைகளிற்காக பெறுகை நேரப்பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறையில், ரூபா 5 மில்லியனிற்கு அதிகமான பெறுகைகளிற்காக பீரீஎஸ் தயாரிக்கப்பட்டது. | பெறுகை நேர பட்டியலானது அனைத்து பெறுகை நடவடிக்கைகளிற்காக தயாரிக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் அறிந்திருக்காததன் காரணமாக அதன் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பான இலக்குக் கட்டங்கள் மற்றும் அத்தகைய இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் எனபவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியானது தலைமைக்கம்பனியுடன் (ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்) உடன் சேர்ந்து தொகுதியாக நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் ஈடுபடுகிறது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காண்பதற்கும் அத்தகைய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |